செ.வெ.எண்.1013 நாள் 19.11.2010

<u>செய்தி வெளியீடு</u>

மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் **(DCCB)** மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான **(UCB)** பொது பயன்பாட்டு மென்பொருள் கூட்டுறவு வாணிப நுகர்பொருள் துறையைப் பற்றிய குறிப்பு

கூட்டுறவு வாணிப நுகர்பொருள் துறையானது மக்களின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. கூட்டுறவு பதிவுக் கழகத்தின் (Registrar of Cooperative Societies) கட்டுப்பாட்டின் கீழ் வரும் கூட்டுறவுத்துறையின் முக்கிய செயல்பாடானது, மாநிலம் முழுவதும் பொது விநியோக அமைப்பின் வழியாக வேளாண் உற்பத்தி மற்றும் கடன், நகர்ப்புற கடன், வேளாண் உற்பத்தி பொருட்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகும்.

மாவட்ட மைய கூட்டுறவு வங்கியானது மாவட்டத்திலுள்ள பொது மக்களுக்கும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வங்கி சேவைகளை வழங்கி வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மாவட்ட மைய கூட்டுறவு வங்கியின் சட்டதிட்டத்தின் கீழ் இயங்கி வருவதால், மாவட்ட மைய கூட்டுறவு வங்கியின் பங்குதாரராக உள்ளது. மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், வங்கி விதிமுறை சட்டத்தின் ஆளுமைக்குட்பட்டது. மாவட்ட மைய கூட்டுறவு வங்கியானது வேளாண் பிரிவை மையப்படுத்தி அனைத்து விதமான வங்கி சேவைகளை வழங்கி வருகிறது.

நகர்ப்புற கூட்டுறவு வங்கியானது, வர்த்தக வங்கிகளைப்போல் செயலாற்றி வருகிறது. கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள் அனைத்தும், கடன் மற்றும் அரசு வழ;ங்கும் உதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்த வங்கியானது வைப்புத் தொகையை ஏற்றுக் கொள்வதோடு அவற்றை மாவட்ட மற்றும் மைய அரசின் பாதுகாப்பில் முதலீடும் செய்து வருகிறது. சிறு வணிகர்களுக்கு கடன் வசதி, தொழில் நிபுணர்கள், கீழ் மற்றம் நடுத்தர வர்க்க தரப்பு மக்களுக்கு வீடு, வியாபாரம், கல்வி மற்றும் நுகர்வோர் கடன் வசதி மற்றும் வேளாண் பிரிவு அல்லாத வியாபாரங்களுக்கும் கடன் வசதிகளை வழங்கி வருகிறது.

பொது பயன்பாட்டு மென்பொருள்

கூட்டுறவு பதிவுக் கழகமானது, மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்காக ஒரு பொது பயன்பாட்டு மென்பொருளை உருவாக்கி அதன் மூலக் குறியீடுகளை வாங்குவதென்றும் தீர்மானித்தது. மூலக் குறியீடு முழுவதும் கூட்டுறவுத் துறைக்கு உரிமையானது மட்டுமல்லாமல், அதில் திருத்தம், மாற்றம் செய்யவோ அல்லது பிற அரசுத் துறைக்கு வழங்கவோ உரிமை உண்டு. இந்த பொது பயன்பாட்டு மென்பொருளானது வரையறுக்கப்படாத பயனாளர்கள் மற்றும் வரையறுக்கப்படாத இடங்களில் பயன்படுத்தலாம்.

எல்காட் நிறுவனமானது, இந்த பொது பயன்பாட்டு மென்பொருளை உருவாக்கம் செய்தல் மற்றும் அதை 3 இடங்களில் வெள்ளோட்டம் செய்யும் பணியினை ரூ.1.37 கோடி மற்றும் விற்பனை வரித் தொகைக்கு திருவாளர்கள் ஆன்வர்டு ஈ–சர்வீசஸ் நிறுவனத்தாருக்கு (M/s. Onward e-services Ltd) திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலமாக வழங்கியது. இந்த இணையம் சார்ந்த மென்பொருளானது, கூட்டுறவு பதிவுக் கழகத்தினால் தேர்வு செய்து அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவினரால் சோதனை செய்யப்பட்டது. அனைத்து விதமான சோதனைகள் செய்தவுடன், இந்த மென்பொருளானது தமிழ்நாடு முழுவதும் வசதி மேலாண்மை சேவை மூலமாக நிறுவப்பட்டது.

வசதி மேலாண்மை சேவை மூலமாக மென்பொருள் நிறுவுதல் **(Rolling out through FMS)**

இந்த பொது பயன்பாட்டு மென்பொருளை தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 1030 இடங்களில் (23 மாவட்ட மைய கூட்டுறவு வங்கியின் தலைமையகங்கள் மற்றும் அதன் 717 கிளை நிலையங்கள், 120 நகரப்புற கூட்டுறவு வங்கியின் தலைமையகங்கள் மற்றும் அதன் 170 கிளை நிலையங்கள்) நிறுவ, திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலமாக வசதி மேலாண்மை சேவை முகவர்களாக திருவாளர்கள் விப்ரோ மற்றும் திருவாளர்கள் ஆன்வர்டு ஈ–சர்வீசஸ் நிறுவனத்தாரைத் தெரிவு செய்து ரூ2.01 கோடி தொகைக்கு பணியினை வழங்கியது.

வசதி மேலாண்மை சேவை **(Facility Management Services)**

வசதி மேலாண்மை சேவையின் பணியானது, தரவு இடம்பெயர்தல், கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கு பயன்பாட்டு மென்பொருள் பயிற்சி வழங்குதல் மற்றும் 2 வாரங்களுக்கான இயக்க ஆதரவை அந்தந்த கிளை நிலையங்களில் வழங்குதல் ஆகும்.

**மென்பொருள் நிறுவுதலின் தற்போதைய நிலவரம் (Current status of roll out)**

1021 கிளை நிலையங்களில், தரவுகள் பொது பயன்பாட்டு மென்பொருளில் புகுத்தப்பட்டும், 930 கிளை நிலையங்களில் இணையம் சாரந்த நிலையிலும் உள்ளது.

**மென்பொருள் சிறப்பியல்புகள் (Software Features)**

- திறந்த மூலநிரல் தொழில்நுட்பத்தில் மென்பொருள் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. சுசே லினக்ஸ் (Suse Linux) இயக்க முறை, ஜேபாஸ் பயன்பாட்டு சேவையகம் (JBOSS Application server) மற்றும் போஸ்ட்கிரஸ் இயக்கத்தில் (Postgresql) இந்த மென்பொருள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த மென்பொருளானது Java, Servlet மற்றும் இதர சூழலில் உருவாக்கப்பட்டது. Mozilla Firefox இணைய உலாவியாக காட்சிகளை வழங்குவதற்கான அடுக்காக உள்ளது.
- ஜேஸ்பர் அறிக்கையானது, விவரகூற்று மற்றும் அறிக்கைகள் தயாரிப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த பயன்பாட்டு மென்பொருளானது, 2 முக்கிய பிரிவுகளான கிளை வங்கிகள் மற்றும் தலைமை அலுவலகக் கூடகங்களைச் சார்ந்த 33 கூடகங்களை (Modules) உள்ளடக்கியது. கிளை வங்கி கூடகமானது, அனைத்து அடிப்படை வங்கி செயல்பாடுகள் கொண்டது. தலைமை அலுவலக கூடகமானது, அலுவலக இயக்கங்கள் அதாவது பணியாள் மேலாண்மை, சம்பளப்பட்டியல், தபால், சரிபார்த்தல் மற்றும் கருவூல இயக்கங்களான முதலீடு செய்தல், கடன் வாங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**நன்மைகள் (Advantages)**

- பணபரிமாற்றத்திற்காக வகுத்த சர்வதேச தரத்தின் அடிப்படையில் , இந்த மென்பொருள் பாதுகாப்பு உள்ளது.
- மைய வங்கி தீர்வுக்கான அளவுகோலாக உள்ளது.
- இந்த மென்பொருள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்காகவும் உபயோகப்படுத்தலாம்.
- பயனாளர்களுக்கு ஏற்றதாக உள்ளது.

- மொழியியல் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. பயனாளர்கள் அவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு மொழியைத் தேர்வு செய்து கொள்ள முடியும்.
- விநியோகத் தடங்களான ஏடிஎம் (ATM), இணையம் சார்ந்த வங்கி (Internet Banking), எஸ்எம்எஸ் வங்கி (SMS Mailing) ஆகியவற்றையும் செயல்படுத்தலாம்.

வங்கிக்கான பயன்கள் **(Benefits to Bank)**

- இந்த மென்பொருள் அனைத்து கூட்டுறவு வங்கிகளும் பயனடையும்
- வங்கிகளுக்கிடையிலான பரிமாற்றங்கள் ஏதுவாகிறது.
- இயக்க செலவினம் குறைவு.
- வாடிக்கையாளர்களுக்கு செய்யும் சேவைத்திறனை அதிகப்படுத்துகிது.

இவ்வாறு மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளை கணிணிமயமாக்குதல் என்ற அறிவிப்பினை செயல்வடிவமாக்கி அதற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்ட மென்பொருள் சேவையை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கோ.சி.மணி அவர்களும் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்களும் நவம்பர் திங்கள் 19 ஆம் நாள் காலை 11.30 மணிக்கு நடைபெற்ற விழாவில் நாட்டுமக்களுக்கு அர்ப்பணிக்கும் வகையில் துவக்கி வைத்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஸ்வரன் சிங், இஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறையின் முதன்மைச் செயலாளர் திரு பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு ஜதிந்திரா நாத் ஸ்வைன், இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப. ஆகியோர் இம்மென்பொருள் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

4/4

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9